## *சின்ன வெங்காயத்திற்கான விலை முன்னறிவிப்பு*

*இந்தியாவிலேயே, தமிழ்நாடு சின்னவெங்காயத்தின் முக்கிய உற்பத்தியாளராகவும் நுகர்வோராகவும் திகழ்கிறது. திண்டுக்கல், திருப்பூர், பெரம்பலூர், திருச்சி, நாமக்கல், தேனி மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் சின்ன வெங்காயத்தை அதிகளவு பயிரிடுகின்றனர். தமிழ்நாட்டில் சின்னவெங்காயம் முக்கியமாக தை, வைகாசி மற்றும் புரட்டாசி பட்டம் ஆகிய மூன்று பட்டங்களில் பயிரிடப்பட்டு சந்தையில் ஆண்டு முழுவதும் கிடைக்கும்படி சேமிக்கப்படுகிறது.*

*இலங்கை, இந்தோனேசியா, தாய்லாந்து, சிங்கப்பூர் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளுக்கு தமிழகத்தில் இருந்து சின்ன வெங்காயம் அதிகளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது. வெளிநாட்டு சந்தை நுகர்வோர்கள், 23 மி.மி அளவுடைய சின்ன வெங்காயத்தையே அதிகளவு விரும்புகின்றனர். திருச்சி மற்றும் திண்டுக்கல் சந்தைகளுக்கு தாராபுரம், பல்லடம் மற்றும் உடுமலைப்பேட்டை ஆகிய பகுதிகளிலிருந்து சின்ன வெங்காயம் வரத்து உள்ளது. தற்போது, உற்பத்தியாளர்கள் விலை உயரும் என்ற நம்பிக்கையில் சேமித்தும் வைத்துள்ளனர். வர்த்தக மூலகங்களின் படி, இருப்பு நிலை மற்றும் மைசூர் வரத்து துவங்கும் வரை (செப்டம்பர்,2021) வெங்காயத்தின் விலையானது தற்போதைய சந்தை விலையை ஒட்டியே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டு திட்டத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டம், கடந்த 22 ஆண்டுகளாக திண்டுக்கல் சந்தையில் நிலவிய சின்ன வெங்காயத்தின் விலை மற்றும் சின்ன வெங்காயம் பயிரிடப்படும் முக்கிய பகுதிகளில் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. விலை மற்றும் சந்தை ஆய்வுகளின் படி நல்ல தரமான சின்ன வெங்காயத்தின் பண்ணை விலை செப்டம்பர் மாதம் இறுதி வரை கிலோவிற்கு ரூ.32-34 வரை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அண்டை மாநிலங்களின் பருவ மழை மற்றும் வரத்து பொறுத்து, வெங்காயத்தின் விலையில் மாற்றங்கள் இருக்கும். எனவே, விவசாயிகள் மேற்கூறிய*

சந்தை ஆலோசனை அடிப்படையில், விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.


**<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்

வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயமுத்தூர்-641 003

தொலைபேசி- 0422-2431405

**<u>தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>**

பேராசிரியர் மற்றும் தலைவர்

காய்கறிப் பயிர்கள் துறை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர் - 641 003.

தொலைபேசி எண் :- 0422-6611374

## Price Forecast for Small Onion

Tamil Nadu is the major producer and consumer of small onion (shallot) in India. Small onion is traditionally grown in Dindigul, Tiruppur, Perambalur, Trichy, Namakkal, Theni and Madurai districts of Tamil Nadu. In Tamil Nadu, small onion is mainly cultivated in three seasons, i.e., Thai, Vaigasi and Purattasi pattam and stored to make it available in the market throughout the year.

From Tamil Nadu, small onion is exported to Sri Lanka, Indonesia, Thailand, Singapore and Malaysia. Consumers in overseas markets prefer small onion of size 23 mm at least. Now, fresh arrivals are started coming from Dharapuram, Palladam and Udumalpet to Trichy and Dindigul markets. Small onion growers are also storing their produce in anticipation of better prices. According to the trade sources, the stock position of onion is good and the price may be remain stable as compared to current market price until Mysore arrivals commence from September'2021 onwards to Tamil Nadu markets.

The TN-IAM Project funded Price Forecasting Scheme of the Centre for Agricultural and Rural Development Studies, Tamil Nadu Agricultural University analyzed the past 22 year historical prices that prevailed in Dindigul Market for small onion. As per the results of the time series analysis, the farmgate prices of good quality small onion till end of September would be around Rs. 32-34 /kg and subsequent price fluctuation would be subjected to the onset of monsoon and arrivals from neighboring states. Hence, the farmers are advised to take up sowing decision accordingly.

***For Marketing details contact:***

*Domestic and Export Market Intelligence Cell*
*Centre for Agricultural and Rural Development Studies (CARDS)*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003.*
*Phone: 0422-2431405*

***For Technical Details please contact:***

*Professor and Head*
*Department of Vegetable crops*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore-641003*
*Phone: 0422-6611374*